48

# பெரியார் பேருரை



அ 3 ணா

Registered.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JAN
MADRAS
R34 wM79
N47
67929

...ஸ் பதிப்பகம்,
... P. O. திருவாரூர்.

# —: நீரடிமுத்து :—

# ஆயிண்மெண்ட் சோப்.

ஜனங்களுக்கு சரீரவாதனை ஏறபடுவது பல காரணங்க்ளால் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். இவ்வருடம் மழையில்லாமையால் ஸ்நான பானங்களுக்கு சுத்த ஜலம் கிடைப்பது அரிதாயிருப்பதாலும் குளிர் கடுமையினாலும், விளைவு குறைவினால் பசிப்பிணியைத் தணிக்க பலவித தானியங்களை உட்கொள்ளுகிறதனாலும் மக்களின் சரீரப்பொலிவு குறைந்து சொரிசிரங்கு ஏற்பட்டு ஒரு சபையிலோ, பல ஜனங்களுக்கு முன்னிலையிலோ அருவருக்கத்தக்கவாறு வீணை வாசிப்பது போல் விகாரமான நிலையில் சொரிவதும் துணியைத் தள்ளிக்கொண்டு சொரிந்தபின் ஏற்படும் மனக்கூச்சலும் ஒழியவேண்டுமல்லவா.

ஒருவித சரீர அவஸ்தையில்லாது தங்கரேக்குபோல் சரீரத்தை வைத்திருக்க இரு சாமான்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

**நீரடிமுத்து சோப்** சரீரத்தில் பாம்புச்சட்டைபோல் சாம்பல் பூப்பதையும், அரிப்பையும் போக்கி சரீரத்திற்கு ஒரு பளபளப்பை உண்டுபண்ணுவதோடு சொரி, சிரங்கு வராமலும் தடுக்கிறது.

**ஆயிண்ட்மெண்ட்**, வந்த சிரங்கு, சொரி, புண் முதலியவற்றை உபயோகித்த மாத்திரத்திலேயே போக்குகிறது. சரீரத்தில் ஏற்படும் புண்ணிலுள்ள துர்நீரை வடித்து சரீரத்திற்கு ஜொலிப்பை உண்டாக்குவதில் நிகரற்றது. உபயோகித்தால்தான் இவற்றின் குணம் வெளிப்படும்.

தயாரிப்பவர்:-

**சவுத் இந்தியன் சோப் வர்க்ஸ்**

தஞ்சாவூர்

# தலைவர்களின் ★ ★

# ★ ★ படங்கள் விற்பனை!

பெரியார், தளபதி. அண்ணா, புரட்சிக் கவிஞர், ஏ. டி பன்னீர்செல்வம், ஈ வெ. ரா. நாகம்மையார். தோழர், அர்ச்சுனன், அம்பேத்கார், நெடுஞ்செழியன், ஜின்னு, முதலியோர்களுடைய படங்கள் 1½ அடிக்கு 1 அடி அளவில் சிறந்த சித்திரக்காரர்களைக் கொண்டு அழகிய பலகலர்களில் கண் கவரும் நிலைமையில் தயாரிக்கப்படுகிறது. கழகங்களையும், வீடுகளையும் அலங்கரிப் பதற்கு அருமையானது. ஒன்றின் விலை ரு 4—0—0 தபாற்செலவு அண 0—9—0 விற்பனையாளருக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். ★ ★ ★ ★

என். எஸ். ஜீவி,

*பெயிண்டிங் ஒர்க்ஸ்.*

நீலா கீழவீதி, நாகப்பட்டணம்.

## இந்தப் பேருரை:

விஜயபுரம் எல்லையம்மன் சந்நதித் தெரு, V. S. ராமன் மின்சாரப் பந்தலில் தோழர், R. சிங்கம் அவர்கள் தலைமையில் 8—8—46 மாலை நடைபெற்ற மாபெருங்கூட்டத்தில் தன்மானம் மிளிர தமிழ் மக்களின் உள்ளத்திலே புரட்சி பொடி தூவிய புத்துலக சிற்பி பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நவின்ற பேருரை.

இப்பேருரையைபலரும் படித்துப் பயனுற எழுத்து வடிவத்திலே கொண்டுவர விரும்பினேன். அதன் விளைவே இந்நூல்.

மதிப்புமிக்க பல பணிகளுக் கிடையே சிரமத்தை கருதாது இப் பேருரையை சரிபார்த்துத்தந்த திராவிடநாட்டுத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு எம் நன்றி உரித்தாகுக!

67929

இங்ஙனம்,
அஜீஸ் பதிப்பகம்,
விஜயபுரம்—திருவாரூர்.

நமது பதிப்பக புதிய ஏஜண்டுகள்:-

1 கி. பா. சந்திரன், பகுத்தறிவு நூல் நிலையம்,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

2 S. T. பாலசுப்ரமண்யன், பவுண்டன்பென்
ரிப்பேர், ராஜாடாக்கீஸ்பக்கம் குடந்தை.

3 இ. லெட்சுமணன், செல்வம் சர்பத்ஸ்டோர்
நீலாகீழவீதி, நாகப்பட்டணம்.

4 கு. கோ. சதாசிவம், காசுக்கடை,
தேரடித்தெரு, பட்டுக்கோட்டை.

5 T. A. பாலகிருஷ்ணன், விடுதலை ஏஜன்ட்,
வடக்கு வீதி, தஞ்சாவூர்.

6 S. முருகேசன், Prop: ஹிக்ஸன் & கம்பெனி
உறையூர், திருச்சி.

7 சாந்தா நியூஸ்மார்ட், போலீஸ்லேன்தெரு, கரூர்.

8 E. V பெரியசாமி, 2, சகினுபாய் செள,
தரவீ, பம்பாய், 17

9 த. உலகநாதன், 6, ரத்தினமுதலிதெரு,
கொண்டித்தோப்பு, மதருஸ்.

10 S. திராவிடசெல்வம். செல்வமாளிகை,
1, செல்வீசர்தெரு, தூத்துக்குடி.


அழகிய அச்சு வேலைகளுக்கு

★ சிறந்த இடம் ★

கருணாநிதி (பவர்) பிரஸ்,

விஜயபுரம்.

உரிமையாளர்: கருணை. எம். ஜமால்,

# பெரியார் பேருரை.

பெரியோர்களே, தாய்மார்களே, நீங்கள் என்னை மிக்க ஆடம்பரத்தோடு, 3-மணிநேர ஊர்கோலத்தோடு, என்னை அழைத்து வந்திருக்கிறீர்கள். எனக்கு இது மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறது. நான் இவ்வூருக்குப் புதியவனல்ல. பலதடவைகள் வந்திருக்கின்றேன். மற்ற தடவை இருந்த ஆடம்பரத்தைவிட இது உண்மையிலேயே அதிகமாக எனக்குத் தோன்று கிறது. முதன் முதலாக ஜஸ்டிஸ் மகாநாடு நடந்த போது ஆடம்பரம் நடந்தது. இரண்டாவது பன்னீர்செல்வத்துடன் வந்தபொழுது நடந்தது. மூன்ருவது தடவையாக இப்பொழுது ஆடம்பரமாக ஊர்வலம் நடந்திருக்கிறது. நான் இந்த ஜில்லாவில் சுமார் 10 ஊர்களில் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு வந்திருக்கிறேன். எல்லா ஊர்களிலும் முன்பிருந்ததை விட இப்பொழுது கூட்டம் அதிகமாகத்தான் இருக்கிறது. ஆதரவு அதிகமாகத்தான் இருக்கிறது. இப்பொழுது நம் கொடிகள் எல்லா இடங்களினும் நாட்டப்படுகின்றன. கொடிகளுடைய உயரப்போட்டி அதிகமாகிக்கொண்டே வருகிறது எனக்கு இது அதிசயமாகத்தான் இருக்கிறது. கொடிகளுடைய உயரத்தை க்கொண்டே கட்சிகளுடைய பலத்தைக் கணக்கிட மாட்டார்கள். இந்தக் காலத்திலே துணி, விறகு, வர்ணப்பஞ்சம் அதிகம் இந்த நிலையிலேயும் கொடி களுடைய எண்ணிக்கை, உயரம் கணக்கில்லாமல்

வளர்ந்துகொண்டே போகின்றன. கொடிகள் போட்டிக்காக நாட்டப்படுவது ஒழிந்து அன்புமுறைக்கு வளரவேண்டும். நம் இயக்கத் தோழர்களுக்குச் சொல்கிறேன். நமக்கு ஒவ்வொரு ஊரிலும் 1, 2கொடிகள் இருந்தால் போதும், அதுவும் ஏதாவது முக்கியமான கழகங்களில் கொடியேற்றினால் போதும். மற்ற காலங்களில்கறுப்பு சட்டை அணிந்துகொள்ளுங்கள். அல்லது கருப்பு அடையாளங்கள் வைத்துக்கொள்ளுங்கள். கொடியின் மூலம் நமக்கு துவேஷமுண்டாவதில்லை. காங்கிரஸ் தோழர்கள்தான் அதன் சாக்கில் துவேஷத்தை ஆரம்பிக்கிறார்கள். கொடிகள் நாட்டப்படுவது துவேஷத்துக்காகஅல்ல. நான் சொல்லுவதிலேசங்கடம் இருந்தாலும்தயவுசெய்து நிதானமாக யோசனை செய்யுங்கள்.

நாங்கள் பலபுது ஊர்களுக்கு, அதாவது தோழர் நெடுஞ்செழியன் சொன்னதுபோல், பட்டி தொட்டிகளுக்கெல்லாம் நாங்கள் சென்று எலக்ஷனுக்காக பிரசாரம் செய்வதற்கு ஆக அல்ல எலக்ஷன் எல்லாம் முடிந்துவிட்டது. அதை மறந்துவிடவேண்டிய காலம் இது. ஜில்லா போர்டு நகரசபை தேர்தலுக்கு தனிப்பட்டவர்கள் சண்டை செய்துகொள்ளட்டும். திராவிடக்கழகம் பொறுத்தவரையில் சொல்லுகிறேன். நாளையே ஓர் கூட்டம் நடந்தாலும் சென்றுகேளுங்கள். அமைதியாகக்கேட்டு வீட்டுக்குச்சென்று ஆலோசனை செய்யுங்கள்: எது தப்பு, எது சரியென்று நீங்களே முடிவுக்கு வாருங்கள்.

கலகம் செய்வது அறிவுடைமையல்ல. உலகம் மிக்க வேகத்துடன் முன்னேறிச் செல்லுகிறது உலகம் எழுச்சி விஞ்ஞானம், அறிவு, ஆராய்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் நாம் கொடிச்சண்டையும் கலகமும் செய்து கொள்ளுவது முற்போக்காகாது. ஒருவரோடு ஒருவர் எதிர்த்து சண்டை செய்வது பழமையை நோக்கிப் போவது ஆகும். பெரியோர்கள் மிதமாக இருந்தாலும் மாணவர்களாகிய நீங்கள் இளைஞர்களாகிய நீங்கள் பழமையை, காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையை வெறுத்து தியாகம் செய்தாவது மாற்றம் காணவேண்டும். நான் காங்கிரஸ்காரர்களுக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். நாங்கள் சண்டைக்காகக் கழகத்தை தொடங்கவில்லை. நம்முடைய கழகம் சுதந்திரம் வேண்டாமென்று கூறவில்லை. தோழர்களே, சிறப்பாக இளைஞர்களே, திராவிடர் கழகம் மனித சமுதாயத்திற்காகப் பாடுபடுகிறது. மீண்டும் சொன்னால் மனித சமுதாய நலனுக்காக உழைக்கிறோம். எங்கள் கொள்கைகளைப்பற்றி யார் என்ன தப்பு சொன்னார்கள்? ஏதாவது தப்பு இருந்தால் சொல்லுங்கள். திருத்திக்கொள்ளுகிறோம். நாங்கள் சுதந்திரம் பெறுவதை ஆதரிக்கிறோம். பொதுவுடமையை ஆதரிக்கிறோம் என்று சொல்லும்பொழுது சந்தேகம் எழலாம். நீங்கள் கேள்விகேட்கலாம் "எங்கள் கொள்கைகளை ஆதரிக்கும் நீங்கள் ஏன் எங்களுடன் சேரக்கூடாது? என்று கேழ்க்கலாம்நாங்கள் உங்களை விட இன்னும் அதிகமாகக்கேட்கிறோம். உங்கள்

இல்லை, தலைவர்களிடம் ஒற்றுமை இல்லை. மக்களிடம் கவலையில்லை. அவ்வளவுதான் குறை காங்கிரஸ்காரர்கள் அன்னியனை வெளியே போகச் சொல்லுகிறார்கள், அன்னியன் என்ற பட்டியலிலே நாங்கள் சொல்லுவது வெள்ளையன் மாத்திரமல்ல இன்னும் சிலரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறோம்.

பொதுஉடமைமைக்காரர்களுக்குச் சொல்லுகிறேன். நாங்கள் பொதுஉடைமை மாத்திரம் கேட்கவில்லை. பொதுஉரிமையும் சேர்த்துக் கேட்கிறோம். பணத்தைப்பிரிப்பது மாத்திரம் பொதுவுடைமை அல்ல. மக்களுடைய உரிமையும் பிரித்துவிட வேண்டும். பணம் அதிகமாகக் கிடக்கும் பணக்காரர்களிடமிருந்து பணத்தைப் பிரிக்கும்பொழுது ஒரு சமூகம் மாத்திரம் பொது உரிமையை அதிகம் அடைவானேன். மற்றவருக்கு உரிமை இல்லாது இருப்பானேன். இம்மாதிரி சில கொள்கைகளைத்தான் சேர்த்துக்கொள்ளச்சொல்லுகிறோம். வெள்ளையன் இந்தியாவைவிட்டு போகத்தான் போகிறான். அது தான் சரி. அவ்வாறே திராவிட நாட்டிலுள்ள திராவிடனல்லாத வடநாட்டுப் பனியாக்களும், மார்வாடிகளும், குஜராத்திகளும், பார்ஸிகளும் சுரண்டுவதை விட்டுவிட்டுப் போய்விட வேண்டும் மனிதனுக்கு சுயேச்சைவேண்டும். அது அரசியலில் மாத்திரமல்ல. சமூகத்திலும், மதத்திலும் வியாபாரத்திலும் கூடத் தான். இது சிறியதாகத் தோன்றலாம், இதனால்

தான் அடிமைத்தனம்எல்லாம் உண்டாகிறது, காங்கிரஸ் திராவிடத் தோழர்கள் சிறிது சிந்திக்கட்டும். வெள்ளைக்காரன் ஒழியவேண்டும் என்று சொல்லும் காங்கிரஸ் தோழர்கள் என்றாவது ஜாதி ஒழிய வேண்டும் என்று சொன்னார்களா? நம்மிடமிருந்து கோவிலுக்காக ஏராளமான பணத்தை வாங்குகிறார்கள். ஆனால் அவற்றை அனுபவிப்பவதெல்லாம் பார்ப்பனர்கள் தானே? காங்கிரஸ் திராவிடர்கள் இன்றும் தங்களின் சூத்திரன் என்ற பட்டத்தை ஒழித்துக் கொள்ளவில்லையே. இதை பித்தலாட்டம், அறிவில்லாத்தனம் என்றுசொல்வதைத்தவிர வேறு என்ன சொல்லுவது?

தீண்டாமை ஒழியவேண்டும் என்று சொன்னார்களே. எப்போதாவது தங்களுடைய சுயராஜ்யத்திலே பிராம்மணர் என்று ஒரு சமூகமும் சூத்திரர் பறையர் என்ற சமூகமும் இருக்காது மனிதர்கள்தான் இருப்பார்கள் என்று சொன்னார்களா? தங்களுடைய சுயராஜ்யப் பட்டியல்களில் பிள்ளை, செட்டியார், அய்யர் ஆச்சாரியார் என்ற பட்டம் இருக்காது, என்று சொன்னதுண்டா? நாளை வேண்டுமானாலும் நான் இங்கேயே இருக்கிறேன். காங்கிரஸ் திராவிடர்கள் காந்தியாருக்கு தந்தி கொடுத்து கேட்டு சொல்லட்டும் அல்லது போனில் பேசட்டும் செலவை நானாவது ஒத்துக்கொள்கிறேன். நாளைக்கு சொல்லுவார்களா? அதற்கு அவர் ஒப்புக்கொண்டால் எங்கள் கழகத்தை கலைத்துவிடவும் தயார்தான்.

25 வருட காலமாக மகாத்மா சொல்லுகிறார் தீண்டாமை ஒழியவேண்டும், ஒழியவேண்டும் என்று, எங்கே ஒழிந்தது? கலகம் வளர்ந்துகொண்டு அல்லவா வருகிறது. அம்பேத்கார் கோஷ்டி தனியாகப் பிரிந்து 1500 பேர் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்களே. இப்பொழுது எங்கே ஒழிந்தது. காங்கிரஸிடம் இருந்த நம்பிக்கையல்லவா ஒழிந்து வருகிறது. இவ்வளவு நாளாக உழைத்துவந்த திராவிடர்களை சூத்திரர் என்ற பட்டத்தோடு இருக்கிறாயே என்று கேட்டால் கேட்பது தேசத்துரோகம். அதைப்பற்றிப் பேசாதே. இந்தா ஜில்லாபோர்டு பிரஸிடெண்டு பதவி உனக்கு மந்திரிபதவி உனக்கு என்கிறார்கள் இதுதானே காங்கிரஸில் சூத்திரர்களுக்கு நடப்பது. மந்திரி பதவியெல்லாம் வேண்டாம். பாட்டன் பாட்டன் தலைமுறையிலிருந்து எனக்கும் என் பிள்ளைக்குட்டி தலைமுறைக்கும் இருக்கும் சூத்திரன் என்ற பட்டத்தைப்பற்றி என்ன சொல்லுகிறாய், என்றல்லவா நாம் கேட்கவேண்டும்? பார்ப்பனர், பறையர் என்ற பட்டம் போய்விட்டால்—உயர்வு தாழ்வு என்ற ஜாதிப்பட்டம் போய்விட்டால்—நமக்கு மகாத்மாவா மந்திரி பதவி கொடுக்கவேண்டும்? காங்கிரஸ்காரர்கள் பட்டம் பதவிகளைத் துறந்தார்களே தங்கள் பெயருக்குப் பின்னால் உள்ள பட்டங்களைத் துறந்தார்களா? தீண்டாமை ஒழியவேண்டும்-ஒழியவேண்டும் என்று கூறினார்களே. ¼ அணா பெருமானமுள்ள பூணூல் அணிந்திருக்கிறார்களே அது எதற்காக? அதை ஏன் துறக்கவில்லை? காங்கிரஸ் திராவிடர்கள் சிந்திக்கட்டும். அதை மனிதனைப்

பிரித்துக் காட்டுவதற்கே போட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் திராவிடர்கள் தபாலாபீஸ்களை கொளுத்தி இருக்கிறார்கள், தந்தி கம்பிகளை அறுத்து இருக்கிறார்கள், பலரைக்கொன்று இருக்கிறார்கள். அக்னி திராவகங்களை ஊற்றி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவர்களுக்கு பூணூலை எடுத்து விடுவது பெரிய காரியமா? 2½-அணுவுக்கு ஒரு கத்தரிக்கோல் வாங்கினால் 10000 பூணூல் அறுக்கலாமே ஐயா. இவ்வளவு கஷ்டப்பட்ட காங்கிரஸ் திராவிடர்கள் தங்களைப் பியூன் வேலைக்கும் பார்ப்பனரை மந்திரிவேலைக்கும் போவது பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார்கள். மந்திரி வேலை வேண்டும் என்ற காரணத்திற்காக சொல்லவில்லை. மந்திரி வேலை யாருக்கு வேண்டும்? அதனாலேயே பிழைக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமுள்ளவர்களுக்கல்லவா வேண்டும். யாரையா ஆங்கிலேயர் வெளியே போகவேண்டாம் என்று சொன்னது? நாங்கள் அவனைப் பிடித்துப் போகவேண்டாமென்று இழுக்க நீங்கள் போகவேண்டும் என்று இழுக்க வெள்ளையன் கிழிந்தல்லவா போய்விடுவான்.

மதத்தில் ஏமாற்றுவதுபோல அரசியலிலும் ஏமாற்றுகிறார்கள். நம்மைப்பார்த்து வெள்ளைக்காரன் கட்சி என்கிறார்கள். சற்று படித்தவர்கள் காங்கிரஸின் கதையை சொல்லட்டும். ஒருவேளை நான் படித்த கதை தவறாக இருந்தால் திருத்திக்கொள்கிறேன். 1917-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஜஸ்டிஸ்கட்சியின் அறிக்கையையும், 1885-ம் ஆண்டில் இந்திய தேசிய

காங்கிரஸ் அறிக்கையும் நீங்களே படித்துப்பாருங்கள். உங்கள் அறிவாளிகளேயே ஜட்ஜாக நியமியுங்கள். அவர்களே சொல்லுவார்கள். முஸ்லிம்லீகையும் இங்கிலீஷ்காரன் கட்சி என்கிறார்கள். முஸ்லிம்கள் இந்த நாட்டில் 10 கோடி பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூறுவது என்ன? தங்கள் 75% மெஜாரிடியாக உள்ள இடங்களில் மைனாரிடி இந்துக்கள் ஆட்சி செய்வதா என்று கேட்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது. இதற்காகத்தான் ஜின்னாவை ஆங்கிலேயனின் அடிமை என்கிறார்கள். திராவிடக் கழகக்காரர்களை ஆங்கிலேயனின் அடிமை என்கிறார்கள். ஆகவே அவர்களுடைய ரகஸ்யம் வெளிக்கிளம்ப வேண்டியதுதான். முஸ்லிம் லீக் ஏன் ஏற்பட்டது? ஷெடியூல் பெடரேஷன் ஏன் ஏற்பட்டது? ஜஸ்டிஸ் கட்சி ஏன் ஏற்பட்டது? ஜஸ்டிஸ் கட்சியை ஏற்படுத்திய தலைவர் பெயர் சொல்லுங்கள், காங்கிரஸை ஏற்படுத்திய தலைவரின் பெயரை சொல்லுங்கள் அப்பொழுது தெரியும் எது யாரால் ஏற்படுத்தப்பட்டது என்று.

இந்தியாவில் வந்து இறங்கியிருந்த ஆங்கிலேயர்களை அங்கு உள்ள முஸ்லிம் நவாப்களும், திராவிட அரசர்களும், மதிக்காததாலே அவர்கள் காங்கிரஸை ஆரம்பித்தார்கள். ஆங்கிலேயர்கள் I. C. S. ஆபீஸர்களாக இருக்கும்பொழுது வடக்கே எங்கே பார்த்தாலும் முஸ்லிம்களும், தெற்கே திராவிடர்களும் உத்தியோகத்தில் இருந்தார்கள். ஆங்கிலேயர்களால்

தங்கள் இஷ்டப்படி எதுவும் செய்யமுடியாததாலே அவர்கள் ஒருகூட்டத்தை (பார்ப்பனர்களை) பிடித்தார்கள் அவர்களோடுராசி பேச ஆரம்பித்தார்கள். பேச்சு வார்த்தையின் பயனாக I.C.S. ஆபீஸர் ஏ. ஓ ஹ்யூம் என்பவர் காங்கிரஸை ஆரம்பித்தார் இதை நான் வேண்டுமென்றே சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள். காங்கிரஸ் சரித்திரமே சொல்லும். 1885-ம் வருடம் டிஸம்பர் 28உ காங்கிரஸின் முதல் கூட்டம் தொடங்கிற்று. கூட்டத்திற்கு வந்த பிரதிநிதிகளை வரவேற்றவர் ஸர் வில்லியம் வெட்டர் பெர்ன் என்ற ஆங்கிலேயர் நம் மாகாணத்திலிருந்து சென்ற பிரதிநிதிகள், மணி ஐயர், அனந்தாசார்லு ஜி, சுப்பிரமணிய ஐயர், வீரராகவாச்சாரியார் முதலியவர்கள் 10 வருடத்திற்கு பிறகுதான் இந்த காங்கிரஸ் பார்ப்பனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது, 60ம் ஆண்டு கலியாணம் காங்கிரஸுக்கு நடக்கும்பொழுது ஓர் பத்திரிகை இந்த சரித்திரத்தை எழுதியிருக்கிறது. அதில்1886 லிருந்து 1896 வரையில் ஹ்யூம் காரியதரிசியாக இருந்திருக்கிறார் என்று எழுதி இருக்கிறது. காங்கிரஸில் உள்ள சிப்பந்திகளுக்கு பட்டங்கள் குவிந்துகிடந்தனவே அதற்குக் காரணம் என்ன? ஸர் பிரோஷ்ஷா மேத்தா, கிஷ்ணசாமிய்யர் முதலியவர் பட்டதாரிகளாயிருந்திருந்தும் இப்பொழுது பட்டம் வாங்குபவர்கள் மாத்திரம் தேசத்துரோகி ஆகிவிடுவார்களா? அவர்கள் செய்த முதல் தீர்மானம் "பிரிட்டிஷ் ஆட்சி நடந்துவருவது கடவுள் "அருளால்" என்பது. இதைப்பற்றி பண்டித மதன்மோகன மாளவியா

சொல்லியிருக்கிறார் "பிரிட்டிஷ் ஆட்சி வந்தவுடன் தான் பயம் நீங்கிற்று. சமத்துவம், சமாதானம், பாதுகாப்பு முதலியன உண்டாயிற்று" என்று இது மாத்திரமா? இவர்கள் வெள்ளையர்களுடன் கூடிக் கொண்டு எவ்வளவோ செய்திருக்கிறார்கள். வெளி நாடுகளிலே சென்று வெள்ளையர்கள் விஷ்ணு அவதாரம் என்று பிரசாரம் செய்யவில்லையா? வெள்ளையர்கள் இந்த நாட்டை நன்றாக, அருமையாக, சிறப்பாக, நீதியாக, அமைதியாக, நாகரீகமாக ஆட்சி செய்திருக்கிறார்கள் என்று சொல்லவில்லையா?

சீனிவாஸ சாஸ்திரி "மகாகனம்" ஆனதெப்படி? வெளிநாட்டுக்கு பிரிட்டிஷ் பிரசாரத்திற்காகச் சென்ற தாலல்லவா? ஆனால் இப்பொழுது வெளிநாடு சென்று பிரசாரம் செய்த Sir A ராமசாமி முதலியார் மாத்திரம் தேசத்துரோகி ஆகிவிடுவாரா? இவர் மாத்திரம் போகக்கூடாதா? T. விஜயராகவாச்சாரியார் ஏன் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டார்? சிவராம ஐயர் என்ற கலெக்டர் பிரிட்டிஷார் பெருமையாக ஆள்கிறார்கள் என்று சொல்லவில்லையா?

காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் ஆரம்பித்து வெகு வருஷங்கள்வரையிலே ராஜவிசுவாச பிரமாணம் தீர்மானம் போட்டுக்கொண்டே வந்தார்கள். கடைசி யில் அமிர்தசரஸில் முகம்மது அலிதான் அந்தத் தீர்மானம் செய்யக்கூடாது என்று எதிர்த்தார். நானும் அந்த மகாநாட்டிற்கு போயிருந்தேன்.

முஸ்லிம் லீக் ஏற்பட்டதிலிருந்தும் திராவிடர்களும் அந்தமாதிரி தீர்மானம் அப்போது செய்யவேண்டி வந்தது.

காங்கிரஸ்காரர்களிடத்தில் பத்திரிகை பலம் இருக்கிறது. பணபலம் இருக்கிறது. உத்தியோகபலம் இருக்கிறது. தங்கள் கையில் அகப்பட்டதையெல்லாம் கொண்டு நம்மை எதிர்க்கிறார்கள். சூத்திரன் என்றும் தேவடியாள் மகன் என்றும் நம்மை சொன்னது வெள்ளையன் அல்லவே? எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஒரு தடவை பாரததேவி பத்திரிகை எழுதிற்று: விஜயராகவாச்சாரியாரின் சிம்மகர்ஜனை என்ற தலைப்பில் பண்டித மோதிலால்நேரு அவர்கள் விஜயராகவாச்சாரியாரைப்பற்றி ஓர் கேள்வி கேட்டாராம். "நான் சிறையில் இருந்த பொழுது நீங்கள் கோர்ட்டில் வழக்காடி சம்பாதிக்க வில்லையா? இப்பொழுது உபதேசம் செய்யவந்து விட்டீர்களோ என்றார் இதற்கு விஜயராகவாச்சாரி கூறிய பதில் என்ன தெரியுமா? 'மோதிலால்நேருவே நான் கோர்ட்டில் வழக்காடியது உண்மைதான். ஆனால் அந்த பணத்தை நான் சொந்தத்திற்காக வைத்துக்கொள்ளவில்லை. காங்கிரஸின் மூதாதையர்களான ஹ்யூம் வெட்டர் பெர்ன் முதலியவர்களுக்கு காங்கிரசை வளர்ப்பதற்கு ஆகவே செலவழித்திருக்கிறேன் என்று கூறினார்" இது நான் சொல்லுவது அல்ல. விஜயராகவாச்ச்சாரியார் இறந்த நாளன்று நமது பாரததேவி எழுதினார் ஐயா வெள்ளையர்கள் ஒழிந்தவுடனே இந்த நாட்டில்

மோக்ஷத்திற்கு டிக்கட் கொடுக்கும் புக்கிங் ஆபீஸ்கள் இருக்ககூடாது. இப்பொழுது மோட்சத்துக்கு அரிசி, பருப்பு அனுப்பும் தபால் ஆபீஸ்கள் இருக்கிறது. இவையெல்லாம் வேண்டும் என்றுதான் நாங்கள் கூறுகிறோம்.

வெள்ளைக்காரர்களா நம்மை ஆள்கிறார்கள்? வெள்ளையன், சட்டத்தைக்கொண்டு ஆள்கிறான். எந்த சட்டத்தைக்கொண்டு? "ஹிந்துலா" (Hindu-law) என்ற சட்டம் நம்மை ஆள்கிறது. ஹிந்து லா எப்படி உண்டாயிற்று தெரியுமா? மனுதர்ம சாஸ்திரம்தான் இந்துலா சட்டமாக ஆக்கப்பட்டது. பராசர் சொன்னது or நாரதர் சொன்னது என்று அதில் குறிப்பிட்டு இருக்கிறது இதை நான் சொல்கிறேனென்று நினைக்காதீர்கள் S. சீனுவாச ஐயர் அவர்களே சொல்லியிருக்கிறார். வேண்டுமானால் இவ் வூரில் உள்ள வக்கீல்களிடம் "ஹிந்து லா" புத்தகம் இருக்கிறது. அவர்களிடம் சென்று பாருங்கள். அதில் எழுதி இருக்கும். இந்துலா மனுதர்ம சாஸ்திரத்தில் இருந்து எழுதப்பட்டது என்று எழுதியிருக்கிறது. நம் வக்கீல்களிடம் பார்க்காதீர்கள். அவர் திருத்தியிருந்தாலும் இருப்பார்கள். பார்ப்பன வக்கீல்களிடம் அப்படியே யிருக்கும்.

மனுதர்ம சாஸ்திரம் எப்படிப்பட்டது தெரியுமா? அதில் நாம் படித்தால் அரசனுக்கு ஆபத்தாம். எப்படிப்பட்ட மனுநீதி பாருங்கள்.

நம்மை ஆள்கிறது. இது ஒழிய வேண்டாமா?

நாம்தான் பாடுபடுகிறவர்கள் வரிப்பணத்தில் பல கோடி ரூபாய்கள் நம்மிடமிருந்தே செல்கின்றன. ஆனல் நம் வீட்டில் சூரிய பகவானும், வருண பகவானும் பல துவாரங்களின் வழியாக லைசென்ஸ் இல்லாமலே புகுந்துவிடுகிறார்களே ஐயா! மனுதர்ம சாஸ்திரப்படி பிராமணுள் தவிர யாருமே படிக்கக் கூடாதே ஐயா! மேலே இருக்கும் பிராமணர்கள் ஹைகோர்ட் ஜட்ஜ் வேலைக்கு வரவிடமாட்டார்கள். அவர்கள் இருப்பார்கள். அல்லது மலையாளிகள் வரட்டும், அல்லது முஸ்லிம்கள் வரட்டும், அல்லது ஆங்கிலேயர்கள் வரட்டும் என்றுதான் சொல்லுவார்கள். திராவிடர்கள் வருவதற்கு இடங்கொடுக்க மாட்டார்கள். ஏன் தெரியுமா? அவன் வந்தால் மனுதர்ம சாஸ்திரத்திற்கு ஆபத்து வந்துவிடும். முஸ்லிம்களுக்கு மனுதர்ம சாஸ்திரத்தினல் தொந்திரவில்லை. கிறிஸ்தவர்களுக்கும் கவலையில்லை. ஆகவே தான் நம்மவர்களுக்கு அங்கு இடமில்லாதபடி செய்கிறார்கள். இதற்காக பல பல ஒப்பந்தங்கள் ஆங்கிலேயர்களுக்கும் ஆரியர்களுக்கும் நடக்கின்றன. இந்த ஒப்பந்தத்தை உடைப்பதுதான் நமது வேலை. பார்ப்பனர்கள் நம்மவர்களை மதிப்பதில்லையென்றாலும் ஆனல் நம்மவர்கள் இருக்கிறார்களே அவர்களைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொள்ளுகிறார்கள். தண்டவாளம் பெயர்ப்பது இவர்கள், தபால் ஆபீஸ்கள் கொளுத்துவது இவர்கள். ஆனல் மந்திரி

சபைக்குப் போவது பார்ப்பனர்கள். இவர்களும் போகிறார்கள் எங்கு சிறைக்குள்! கட்சிகள் மூன்று இருக்கலாம். மகாத்மா கட்சி, ராஜாஜி கட்சி, முதலியன. ஆனால் எல்லாம் ஒன்றுதான் ஒரே முதலாளி, ஜவுளிக்கடை, பலசரக்குக் கடை, எல்லா கடைகளும் வைத்திருக்கவில்லையா? இது மாதிரி பல பெயர்கள்கொண்ட கட்சிகள் வைத்திருந்தாலும் எல்லாவற்றிற்கும் அவர்கள்தான் இருப்பார்கள். கம்யூனிஸ்டு சமதர்மக்கட்சிக்கும் பாருங்கள், அதற்கும் அவர்கள்தான் தலைவர்களாய் இருப்பார்கள். இன்னும் சில செய்திகள் கூறுகிறேன். ராஜாஜீக்கும் காமராஜூக்கும் சண்டை வந்ததே, ராஜாஜீக்குப் பிறகு ஒரு பிரகாசம் வந்துவிட்டாரே. பிரகாசம் வந்தாரே தவிர முத்துரங்கமுதலியார் வரமுடியவில்லையே! பார்ப்பனருக்குள் ஒருவரைத்தான் ஒத்துக்கொள்வார்களே தவிர வேறு ஒருவனுக்கு விட்டுக்கொடுப்பார்களா? உடனே காமராஜ் ராஜினமா செய்வதல்லவா பொருத்தம். அவருக்கு இன்னும் காந்தி பக்தி விடவில்லையே ஐயா! நமக்குள்ளே ஒற்றுமை கிடையாதே.

நம்மைவிட்டுப் பிரிந்த பட்டதாரிகள் இருக்கிறார்களே, அவர்கள் சில நாளாக ஓர் பிரசாரம் செய்து வருகிறார்களாம். ஏன் கட்சியைவிட்டு விலகினீர்கள். என்று கேட்டால், பெரியார் கடவுள் விஷயத்தில தலையிட்டார், அது எங்களுக்குப பிடிக்கவில்லை. ஆகவே நாங்கள் விலகிக்கொண்டோம் என்றார்களாம். எங்களைவிட கடவுள்பக்தியில் சிறந்தவர்கள் அவர்கள்.

அவர்களுடைய கடவுள் பக்தியைப்பற்றி எங்களுக்குத் தெரியாதா? இப்பொழுது ராஷ்டிரபதியாகவிருக்கும் பண்டித நேரு சிறிது காலத்திற்கு முன் கோர்ட்டில் நடந்த கேஸில் பதில சொல்லுவதற்கு முன் கடவுள் சாக்ஷியாகச் சொல்கிறேன் என்று சொல்ல மறுத்துவிட்டாராம். ஏன் என்று கேட்டதற்கு கடவுள்பேரில் தனக்கு நம்பிக்கையில்லையென்று சொல்லிவிட்டாராம். அப்படிப்பட்ட அவருடன் தினமும் கடவுளிடம் பேசுவதற்கு 24-மணி போதாமல் வேறு கடனும் வாங்கிக்கொண்டு கடவுளிடம் பேசும் காந்தியார் சேர்ந்துகொண்டு இல்லையா?

கடவுளைப்பற்றிப் பேசும்பொழுது மற்றொரு விஷயம் ஞாபகம் வருகிறது. தேசிய முஸ்லிம் தோழர்கள், முஸ்லிம் லீக் தோழர்கள் எங்களுடன் ஒத்துழைப்பதைப் பார்த்து, குறை கூறுகிறார்கள். என்னவெனில் நாம் நாஸ்திகர்கள், ஆகவே நம்முடன் சேரக்கூடாது என்று சொல்லுகிறார்கள். கல்லையும், மண்ணையும், சாணியையும் வணங்கும் தோழர்களுடன் உருவமில்லாத தெய்வத்தை வணங்கும் தேசிய முஸ்லிம்கள் சேருவதுமாத்திரம் சரிதானா? அது மாத்திரமா? மகாத்மா காந்தி ரயில்வே ஸ்டேஷன்களை யெல்லாம் பஜனை மடமாக்கி பஜனை செய்யும்பொழுது இந்த தேசிய முஸ்லிம்களும் சேர்ந்து ராம பஜனை செய்யவில்லையா? தாளம் போடவில்லையா?

நான் கடவுளைப்பற்றி சொன்னதென்ன?

கடவுள் இல்லையென்று நம் கழகம் ஓர் நாளும் சொல்ல வில்லையே! கடவுளுக்கு என் ஐயா பெண்டாட்டி, பிள்ளைகள், தாசி வீடுகள், பள்ளியறைகள் என்று தானே கேட்கிறேன். இதற்காக முஸ்லிம்கள் நன்றியல்லவா செலுத்தவேண்டும். ஏன் எனில் நபிகள் சொன்ன கருத்துக்களை பெரிதும் நான் பிரசாரம் செய்வதற்காக. முஸ்லிம்கள் சட்டப்படி காந்தியை மகாத்மா காந்தி என்று சொல்லக்கூடாதே இது அவர்கள் சட்டமாயிற்றே. ஆனால் தேசீய முஸ்லிம்கள் மகாத்மா என்று தானே சொல்லுகிறார்கள்? நான் எங்களூரில் முஸ்லிம் ஒருவருக்கு காந்தியாருக்கு உபசாரப் பத்திரம் எழுதும் பொழுது காந்தியைப்பற்றி தீர்க்கதரிசி என்று எழுதியிருந்தேன். அப்பொழுது அங்கிருந்த முஸ்லிம் பெரியார்கள் "தீர்க்கதரிசி" என்ற பட்டத்தை எடுத்து விடும்படி கூறினார்கள். இப்பொழுது இருக்கும் முதலாளி சாகிப்தான் எடுத்துவிடும்படி கூறினார்.

காங்கிரஸ்காரர்கள் சூத்திரன் பட்டத்தைப்பற்றி கவலைப்படுவதில்லையே. எதனாலே? சிவராஜ் பறையர் அவர் படிக்கவில்லையா? பட்டம் பெறவில்லையா? அறிவாளியல்லவா? பின் ஏன் அவருக்கு அந்த பட்டப்? எங்களைவிட்டுப் பிரிந்ததாகச் சொல்லும் பி. டி. ராஜன், ஷண்முகம் செட்டியாரும் சூத்திரன் என்ற பட்டியலில் உள்ளவர்கள்தானே. இன்னும் சொல்லுகிறேன். என்னைவிட மட்டமான சூத்திரன் பட்டம் ஷண்முகம் செட்டியாருக்கு! ஏன்? நான் வேதாரணியம் கோயிலுக்குப் போகலாம், அவர் போகக்

கூடாது. "நான் ஹிந்து என்பதிலேயே பெருமை அடைகிறேன்" என்று கூறினார்களாம். அப்படி என்றால் என்ன பொருள்? தன்னை தீண்டப் படாதவன், தொடப்படாதவன் என்று சொல்லுவதிலேயே பெருமை அடைகிறார் என்றுதானே பொருள்? Sir P. T. ராஜன் குடும்பத்தார் பல கோயில்களைக் கட்டி இருக்கலாம். உற்சவம் நடத்தி இருக்கலாம், கும்பாபிஷேகம் நடத்தியிருக்கலாம் ஆனால் கோயில் முன்னாலே அவர்கள் சூத்திரர்கள் தானே? கடவுள் முன்னால் அவர்கள் தீண்டாதவர்கள்தானே? அவர் கோயிலின் உள்ளே செல்ல முடியாதே. சுவாமியைத் தொடமுடியாதே.

அண்ணாமலைசெட்டியார் எவ்வளவோ தர்மம் செய்திருக்கிறார். பல கலாசாலை கோயில்கள் கட்டித் தந்திருக்கிறார். சிதம்பரம் கோயிலில் போடப்பட்டிருக்கும் தங்க ஓடுகளில்கூட அவர் பணம் போட்டிருக்கலாம். ஆனால் அவரை கோயிலில் உள்ளே விடுவார்களா? அவரும் சூத்திரன்தானே ஐயா? 2 நாளைக்கு நாம் அரிசி கொடுக்காவிட்டால் பட்டினி கிடக்கும் சாமிகளும், ஆசாமிகளும், அவர் உள்ளே சென்றால், செட்டியார்வாள் கொஞ்சம் வெளியே நில்லுங்கோ! முதலியார்கள், கொஞ்சம் அப்பால் செல்லுங்கள், பிள்ளைவாள், கொஞ்சம் பிந்தி செல்லுங்கள், மைனர் வாள் அப்புறம் வாருங்கள் சாமிக்கு பிரசாதம் படையல் நடக்கிறதுஎன்று சொல்லுகிறார்களே! ஆனால் இவர்ளுக்கு முன்னால் பார்ப்பனர்களுக்குத்தானே

மதிப்பு. அதைப் பார்த்து உங்களுக்குக் கவலை பிறக்க வில்லையா? உண்மையாக சொல்லுகிறேன். மற்றும் பெருமையோடு சொல்லுகிறேன். எங்களைத்தவிர இந்த நாட்டில் நடக்கும் இவ்வக்கிரமங்களைக் கேட்க வேறு யாருமில்லை.

மதம் என்றால் மானமே இருக்கக்கூடாதா? மனிதன் மனிதனாக வாழ மதம் இடங்கொடா விட்டால் அந்த மதம் இருந்தென்ன இல்லாவிட்டால் என்ன என்று நாம் கேட்கிறோம். இதைச்சொல்லும் பொழுதுதான் பாரப்பனரைவிட 'சூத்திரர்களுக்கே' அதிக கோபம் வருகிறது. தெருவில் பிச்சை எடுக்கிறானே பக்கிரி முஸ்லிம், அவனை பள்ளிவாசல் உள்ளே போகக்கூடாது என்று சொன்னால் கத்தி எடுத்து குத்த வந்துவிடுவானே.

எந்த நாட்டில் பிராமணன் சூத்திரன், தீண்டப் படாதவன் என்ற பட்டம் இருக்கிறதோ அங்கே எப்பொழுதும் சண்டைதான். அன்னிய ஆட்சிதான். காந்தியார் சொல்லும் ராம ராஜயத்தைப்பற்றி உங்க ளுக்குச் சொல்லுகிறேன். ராமராஜ்யத்தில் என்ன நடந்தது? பார்ப்பனன் ஒருவன் அரசனிடம் வந்து தன்மகன் செத்து விட்டதாக முறையிட்டான். ராமன் சென்றான் கண்டு பிடித்தான் அதன் காரணத்தை என்ன தெரியுமா? சாம்பன் என்ற பார்ப்பனரல்லாத ஒருவன் கடவுளைக் கும்பிட்டுக்கொண்டிருந்தான் என்பதுதான். உடனே ராமன் அவனை கொன்று

விட்டாராம் பார்ப்பனப்பையன் பிழைத்துக்கொண்டானும்: இது ராமாயணம் கூறும் கூற்று. அதுதானே காங்கிரஸ் ஆட்சியிலும் நடக்கும். ஆகையால் இந்த கொள்கையை ஒழிப்பதற்கு என்ன கஷ்டம் வந்தாலும், சிறைக்கு செல்ல நேர்ந்தாலும் திராவிட கழகம் பின்வாங்கப்போவதில்லை. காங்கிரஸ்காரர்கள் இப்பொழுது ஒரு பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்த நாட்டில் ஒரே கட்சிதான் இருக்க வேண்டுமாம்; ஒரே கொடிதான் பறக்கவேண்டுமாம். உண்மை என்ன? இந்த நாட்டிலுள்ள 40 கோடி மக்களும் ஒரே கட்சியிலா இருக்கிறார்கள். இதிலே 560 சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. அங்குள்ள மக்களுக்கும் காங்கிரசுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையே. அவர்களையும் 40 கோடிக் கணக்கில் சேர்த்துக்கொண்டார்கள். திருவாங்கூர் சமஸ்தானத்துக்குள்ளே போகப்போகிறேன் என்று சொல்லிக்கொண்டு காந்தியார் சென்றார். உடனே திவான் Sir. C. P. ராமசாமி ஐயர் அவரை உள்ளே வரக்கூடாது என்ற உத்திரவை நீட்டினார் காந்தியாரிடம். என்ன வெல்லாமோ பயமுறுத்தினார் காந்தியார். அசையவில்லை Sir C. P.

வைஸ்ராய்க்கு தந்தி அனுப்பினார் காந்தி. ஆனால் உடனே வைஸ்ராயிடமிருந்து பதில் வந்தது. "உங்களுக்கு அனுப்பிய தந்தியின் நகல் ஒன்று சர். C. P.யால் எனக்குக்கிடைத்து விட்டது என்னால் அதில் தலையிடமுடியாது" என்று, திரும்பினார்

காந்தி வெற்றியோடு? மறறெருரு தடவை ராஜ்கோட் சமஸ்தானத்திற்குள் செல்வதற்காக சாகும் வரை என்று பட்டினி கிடந்தார். ஆனல் அந்த சமஸ்தான ராஜா காந்திக்காக 6 அடி நீளம் பூமி தயாராக இருக்கிறது என்று கூறிவிட்டார் ஆகவே அந்தராத்மா பட்டினியை விட்டு விடும்படி சொன்னது அதுவேறு ராஜ்யம், அதில் நமக்கு என்ன வேலே'' என்று பட்டினியை நிறுத்திவிட்டார். தற்போது ராஷ்டிர பதியாகவிருக்கும் நேரு அவர்கள் காஷ்மீரத்திற்குச் சென்ருர். உடனே மந்திரிகள் தடையுத்திரவு போட்டார்கள். ஒரு நாள் காவலில் இருந்தார். மறுநாள் இங்கே திரும்பிவிட்டார். பிறகு அரசரோடு கூடி பல ஒப்பந்தங்கள் செய்துகொண்டுபோய்விட்டு வந்தார். மற்றும் சமஸ்தானத்து மக்கள் நீங்க மீதி உள்ள மக்களில் எல்லாருமா காங்கிரஸை ஆதரிக்கிருர்கள்? சமீபத்தில் நடந்த தேர்தலிலே 10 கோடி முஸ்லிம்களுக்கு பிரதிநிதி முஸ்லிம் லீக்தான் என்பது ஆகிவிட்டது. காங்கிரஸ்காரர்கள் ஒருவர் கூட நம் மாகாணத்தில் முஸ்லீம்களுக்கு பிரதிநிதியாக வில்லேயே! இப்படி இருக்கும்பொழுது ஒரே கொடி பறக்கவேண்டும் என்று சொல்லுவானேன்? நமக்கு எல்லோருக்கும் ஓட்டுரிமை வேண்டும். இப்பொழுது யாருக்குஓட்டுரிமை இருக்கிறது.? 100-க்கு 13-பேருக்குத்தானே அதுவும் படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் தானே ஏழை மக்கள் மிகுந்த இந்த நாட்டிலே எல்லோருக்கும் ஓட்டுரிமை வைத்து முஸ்லிம்களுக்கு பிரித்துக் கொடுத்ததுபோல வகுப்பு

வாரியாகப் பிரித்துக் கொடுத்துவிட்டால் காங்கிரஸுக்கு ஓர் ஆளை பிடித்துவிட முடியுமா? திராவிட நாடு பிரித்துக் கேட்கிறோம் இப்பொழுது. தோழர் வடபாதிமங்கலமும் வாண்டையார் அவர்களும் காங்கிரஸில் சேருவானேன். திராவிடநாடு வடநாட்டான் தலைமையில் இருப்பதால்தானே நம் கட்சியில் வந்து தலைமை தாங்கி நடத்தட்டுமே? தோழர் நெடுஞ்செழியன் சொன்னதைப்போல இந்தியா ஒன்றாகவா இருக்கிறது. உடையைப்பற்றி சிந்தியுங்கள் உணவைப்பற்றி சிந்தியுங்கள் கடவுளைப்பற்றி பாருங்கள் எத்தனை வேறுபாடுகள் உண்டு நம்மசோறு தின்கிறமாதிரி வேறு ஒருத்தன் தின்க மாட்டானே ஐயா? ஆனால் வட நாட்டார் நம்மை ஏமாத்திகிட்டே இருக்கிறான் அதுக்கு ஏன் இவங்கள்ளாம் வால் பிடிக்கிறாங்கள் ஓ தான் தெரியல்லே. வடநாட்டிலிருந்து கடவுளையும் சாஸ்திரங்களையும் இறக்குமதி செய்ததுபோல்தான் மகாத்மாக்களையும், ராஷ்ட்டிரபதிகளேம் இறக்குமதி செய்கிறார்கள். மகாத்மாக்கள் வரும்பொழுது சும்மாவாவருகிறார்கள், அவர்களுடன் பிர்லா, டாடா, பாஜாஜி, முதலியவைவர்களையும் நம் நாட்டிற்கு அழைத்து வருகிறார்களே. அவர்கள் இந்த நாட்டிலிருந்து எவ்வளவு சுரண்டிக்கொண்டு போகிறார்கள் என்பது கணக்குக் கிடையாது. நம்ம நாட்டிலேயும் எல்லா வீடுகளிலேயும் பாருங்களேன் கஸ்தூரிபா போட்டோ, நேரு போட்டோ, காந்தி போட்டோ தானே ஐயா இருக்கிறது. காமராஜ் சேர்ந்து எத்தனை ஆண்டாக உழைகிறார், தலைவராக

R34W379

இருக்கிறார் அவர் படம் ஒன்றுகூட காணோமே ஐயா? ஒரு உபயதுல்லா படம் கூட காணோமே இங்கேதான் காந்தி சிலை நாட்டனும்னு சொல்லு றீங்கள் உங்கள் தலைவர் பெயர்கூட அங்கே காணோமே ஐயா? ராஷ்ட்டிரபதியை எல்லாம் வடநாட்டிலிருந்து தான் இறக்குமதி செய்யவேண்டுமா? நம்ம நாட்டிலே இருந்து 63 நாயன்மார்கள் ஆழ்வார்களும், சித்தர் களும், பட்டினத்தார்களும், அருணகிரி நாதர்களும் உதித்து உதித்து போயிருக்கிறார்கள் என்று பெருமை அடைகிறீர்கள். இங்கேயே உங்களுக்கு ஒரு ராஷ்ட் டிரபதி பிறக்காமலா போய் விட்டான். இதெல்லாம் பார்த்துப் பார்த்துதான் ஐயா நாங்கள் திராவிடநாடு பிரிக்கவேண்டும் என்று சொல்லுகிறோம். பிரிந்து போச்சுன்னு நம்ம கேட்காமே ஒரு ராஷ்ட்டிரபதி நாட்டுக்குள்ளே வர முடியாது. நம்ம நாட்டில் இருப்பது போல வேறே எந்த நாட்டிலும் இவ்வளவு நீண்ட துறைமுகம் கிடையாதே. நினைத்துப்பாருங் கள் விசாகப்பட்டணத்திலிருந்து மதுராஸ் வழியே ஒரு சுற்று சுற்றிக்கொண்டு மங்களூர் வரையில் செல்லுவது எவ்வளவு நீளமான கடற்கரை. நம்ம நாட்டில் என்ன இல்லை. தங்கம் வருஷத்திலே பல கோடி ரூபாய்க்கு வெளி நாடுகளுக்குப் போகிறது. முத்துக்கள் வெளிநாட்டிற்கு செல்லுகின்றன. ஏராள மான நதிகள், கடல்கள், மலைகள் எந்த இடத்திலும் இல்லாத அவ்வளவு செழித்த வயல்கள் எல்லாம் இருக்கிறது. நம்மகிட்டே எல்லா சக்தியும் இருக்கும் பொழுதுகூட நமக்கு சௌகரியம் இல்லையே

அதற்காக தான் பிரிக்கணும்னு சொல்லுகிறோம்.

வடநாட்டிலிருந்து வரும்பொழுது சாதாரண மார்வாடியாய்வராது. போகும் பொழுது யெரிய பணக்கார சவுக்காராராகப் போருங்களே இதைப்பற்றி யாராவது சிந்திச்சு பார்த்ததுண்டா? வர்ரவங்கள் தான் ஒழுங்கா இருக்காங்களா அவங்களும் தங்களே மேல் ஜாதின்னு நெனைக்கிறுங்க, அக்கிரகாரம் தனியா இருப்பதுபோல சவர்க்கார் பேட்டைனு தனியா பிரிச்சு பெயர் வைத்துக்கொண்டுயிருக்கிறுர். இதை அனுமதிப்பது நம்முடைய இனத்திற்கே இழிவல்லவா? இதை எல்லா காங்கிரஸ் திராவிடர்கள் சிந்திப்பதில்லையே சமீபத்திலே மதுரையில் ஒருவர் பஞ்சம இந்து பிணத்தை ஜாதி ஹிந்து சுடுகாட்டில் கொளுத்தியதற்காக 6-மாத தண்டனையடைந்ததும் அதற்காக ஒருவர் அறிக்கை விட்டதும் அவர் தண்டனையிலிருந்து நீக்கப்பட்டதும் உங்களுக்குத் தெரியும். மற்ருருசெய்தி முக்கியமானது. அதாவது:

ராஜாஜி மந்திரிசபை இருக்கும்பொழுது ஓர் சட்டம் செய்தார். என்னவெனில் கவர்ன்மெண்ட் லைசென்ஸ் பெற்ற கடைகளிலேயும் வரிப்பணத்தால் பாதுகாக்கப்படும் எல்லா ஸ்தாபனங்களிலும் எல்லோருக்கும் உரிமை உண்டு. என்று ஓர் சட்டம் இயற்றி இருந்ததைக் கேட்டதும் நான்கூட பெரிதாக தலையங்கம் எழுதினேன். பிறகுதான் தெரிந்தது அவர் வெளியே வரும்பொழுது புது வியாக்யானம் செய்து

விட்டு வந்துவிட்டார். நான் ஓர் லெட்டர் ஒன்று அதுபற்றி எழுதியிருந்தேன் கவர்னருக்கு. அதற்கு பதில் எழுதி இருக்கிறார்கள். ராஜாஜி செய்த சட்டத்தில் "லைசென்ஸ் பெற்ற கடைகளில் யார் வேண்டுமானாலும் போகலாம் கடைக்ககாரர்கள் தங்களுக்குப் பிடிக்காத எவரையும் வெளியேற்றலாம்" என்பது ஆக சட்டம் செய்திருக்கிறார். எப்படி இருக்கிறது பாருங்கள் எல்லோரும்உள்ளே போகலாம் எவரையும் வெளியே தள்ளலாம் இதுதான் சம உரிமை சட்டம். நம் 1938, 15 18a 1939 21 19c பக்கங்களில் இருக்கிறது. எல்லா இடங்களிலும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பிரச்னைகள் வந்துவிட்டது.

சர்க்கார் பள்ளிக்கூடங்களில் பார்ப்பனர்கள் ஆசிரியர்கள் 63-பேர்கள் உள்ள இடங்களில் 3-பேர் தான் பார்ப்பனரல்லாத ஆசிரியர். இதில் ஒருவர் டிராயிங் மாஸ்டர் ஒருவர் தமிழ் பண்டிட், மற்றவர் டிரில் மாஸ்டர் இம்மாதிரி வேலையில்தான் அதுவும் சிலர்தான் இருக்கிறார்கள். லயாலா காலேஜ், விவேகானந்தா காலேஜ் முதலிய இடங்களில் 96% பார்ப்பனர்கள் இருக்கிறார்கள். இதை தெரிந்தாவது உங்கள் இனம் உயர்வு அடைய ஒன்றும் செய்ய மாட்டீர்களா?

வேலை நிறுத்தத்தைப்பற்றி உங்கள் கருத்து என்ன? உண்மையிலேயே கஷ்டங்களுக்கு ஆக வேலை நிறுத்தம் செய்வதை ஆதரிக்கின்றேன். பக்கிங்காம்

கர்ஞடிக்மில் வேலை நிறுத்தத்தைக்கூட நாங்கள் மிகவும் ஆதரித்தோம், கூட்டங்கள் கூட்டி இருக்கிறோம் காங்கிரஸ்காரர்கள் முன்பெல்லாம் வேலை நிறுத்தத்தை ஆதரித்தார்கள், பேசினர்கள். ஆனல் இப்பொழுது பதவிக்கு வந்தவுடன் அதை வெறுக்கிறார்கள். சுட்டு அடக்குகிறார்கள். ஒழுங்கான முறையிலே வேண்டியபோது மட்டும் வேலை நிறுத்தம் செய்வதை நான் ஆதரிக்கிறேன். நாட்டில் புரட்சியாலும் வேலை நிறுத்தத்தாலும் தான் ஓர் வழி காண முடியும் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது சில இடங்களில் நம் கூட்டங்களில் கலகம் செய்துகொண்டே வருகிறார்கள் சேலத்தில் நடந்த ஊர்வலத்தில் ஒரு பையனுடைய கண்ணைக் குத்திவிட்டார்கள் ஆஸ்பத்திரியில் இருந்து 25 நாளைக்குப்பிறகு கண்ணை எடுத்துவிட்டார்கள் ஒரு கண்ணோடு இருக்கிறன் 1 மாதத்திற்குப் பிறகு பளிங்கு கண்ணை வைப்பதாக டாக்டர் சொன்னாராம். நான் அந்தப் பையனைக் கேட்டேன் அவன் பளிங்குகண் வைத்துக் கொள்ள மறுத்துவிட்டான். அந்தக்கண்ணை எல்லோருக்கும் காட்டப் போவதாகச் சொல்லிவிட்டான். அவனை மெட்ருசுக்கு வரும்படி தந்தி அடித்திருக்கிறேன். மந்திரியிடம் கொண்டுபோய் காட்டச் சொன்னேன். உடனடியாக நடவடிக்கை எடுக்கா விட்டால் கவனிப்போம் நம் நாட்டை பிரித்துவிட வேண்டும் பிரித்துவிட்டால் நம்முடைய நாட்டின் எல்லையிலே பரிசோதகர்கள் இருப்பார்கள் அவர்

67929

களிடம் தப்பி அன்னியர் யாரும் உள்ளே வந்துவிட மாட்டார்கள். நமக்கு வேண்டிய சாமானை நாமே தான் தயாரித்துக்கொண்டு விடுவோம் வெளிநாட்டிலிருந்து, நம்ப நாட்டில் உற்பத்தியாகும் சாக்குக்கு போட்டியாக ஒன்றும் வராது அப்படி இருந்தால் வரிபோடுவோம். இதனாலே யாருக்கு நஷ்டம்? பிர்லா, டாடாக்குக்குந்தானே. ஆகையினாலேதான் காந்தியார் இதை ஒத்துக்கொள்ளுவது இல்லை. பிரிந்தால் காந்தி மகாத்மா கார் வந்தாலும் பரிசோதனை செய்வார்கள்.

பரிசோதகர்:- எதற்காக செல்லுகிறீர்கள்.

மகாத்மா: ஊரை பார்ப்பதற்காகச்செல்லுகிறேன்.

பரிசோதகர்:— உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கு எங்கே காட்டும். காண்பிக்கிறார்.

பரிசோதகர்:— உள்ளே போகும்படி விடுவார் ஓர் போட்டோவை வாங்கிக்கொண்டு 15 நாட்களுக்குள் திரும்பி வந்துவிட வேண்டும் என்ற நிபந்தனையோடு. 15 நாள் சென்று திரும்பிவருவார். பிறகு பேச்சு நடைபெறும் விதம்.

பரிசோதகர்:— எவ்வளவு பணம் கொண்டுபோனீர்கள்.

பதில்:— ....................இவ்வளவு ரூபாய்.

பரிசோதகர்:— என்ன செலவு.

பதில்:— .........இவ்வளவு ரூபாய்.

பரிசோதகர்:—சரி செலவுபோக மீதிபணம் ஏன் அதிகமாக இருக்கிறது.

பதில்:— ஜனங்கள்............நிதிக்காக பணம் கொடுத்தார்கள் அந்தபணம்தான் கொண்டுபோகிறேன்

பரிசோதகர்:—எந்த நிதியாயிருந்தாலும் எங்கள் ஜனங்கள் பணத்தை இங்கே வச்சட்டு செலவுக்கு மாத்திரம் எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் நாட்டிலே வசூல் செய்யுங்கள்........................இப்படித்தான் வியாபாரியும்.

இதுதான் நடைபெறும். யார் வந்தாலும் ஜின்ஞ சாயபு வந்தாலும் சரி, பெண் கொடுத்து பெண் வாங்கினாலும் சரி இதுதான் நடக்கும். நாட்டை பிரிக்கக் கூடாது, பிரிக்கக்கூடாது என்று கூத்தாடினார்களே. கோவாடையுடாமா, புதுச்சேரி காரைக்கால் எல்லாம் பிரிந்து இருக்கவில்லையா? திராவிடநாடு பிரிப்பது என்றால் நம் நாட்டிற்கும் வேறு நாட்டிற்கும் இடையில் அகழி ஒன்றும் இருக்காது. வெளிநாட்டிலிருந்து எவ்வளவோ இறக்குமதியாயிருக்கிறது. ஆடு, மாடு ஒட்டி வரும்பொழுது கடவுள்களையும் கொண்டுவந்து விட்டாங்க; நம்ம கடவுளே அல்ல இவைகள். நான்

இரண்டு நாளைக்கு முன்னே கோவிலுக்குப் போயிருந்தேன் அங்கே உள்ள சாமிக்கு 3½ கலம் அரிசி சமைக்கிறாங்க இது அக்கிரமம் இல்லையா? அங்கே கோயில் உள்ளே ஒன்றும் இல்லையாம். தினம் உண்ண கொடுக்கிறோம், உடுக்க கொடுக்கிறோம். ஆனால் அந்த கடவுள் கொடுத்த சூத்திரப்பட்டம் இன்னும் இருக்கிறதே. இந்த கடவுள்களுக்கெல்லாம் சுமார் 2000 வருஷமாக சோறுபோட்டு சாவாமல் பார்த்துக்கொண்டிருந்தாலும் இன்னும் அவைகளுக்கு தமிழ் தெரியவில்லையே.

திராவிடநாடு பிரிந்தால் என்ன நடக்கும் என்று கேட்கும் தோழர்களுக்கு நான் சொல்லுவது என்னவென்றால், பிரிந்துவிட்டால் நம் நாட்டிலிருந்து ஒரு பைசா கொள்ளையடிக்கமுடியாது; ஆங்கிலேயன் காங்கிரஸ்காரர்கள் தண்டவாளத்தைப் பிடிங்கியதாலேயோ, தபால் ஆபீஸ் கொளுத்தியதாலேயோ போகப்போவதில்லை. ஆங்கிலேயர், ரஷ்யர், அமெரிக்கர் யுத்தத்தில் செய்துகொண்ட உடன்படிக்கைபடி அவர்கள் நாடுகளை விடப்போகிறார்கள். சமீபத்தில் அமெரிக்கர் பிலிபைன் தீவை விட்டுவிட்டார்கள். அதற்காகவே ஆங்கிலேயர்களும் இந்தியாவை விட்டுவிடுவதற்காகத்தான் சாவியை யார் கையில் கொடுப்பது என்பதற்காகத்தான் சமீபத்தில் வந்தார்கள். அதைப்பற்றி காந்திகூட உண்மை என்று சொல்லியிருக்கிறார். ஆகவே நமக்கு வேண்டிய நலன்களைப் பாதுகாக்க நாம்போர் தொடுக்கவேண்டும். நாம் தான்

முதலில் போர் தொடங்கவேண்டும் என்று சொன்னோம். ஆனால் பிந்திவிட்டோம். முஸ்லிம்லீக் காரர்கள் போராட்டத்தை ஆரம்பிக்கப்போகிறார்கள், ஆதி திராவிடர்களும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே நாமும் தொடங்கவேண்டும். அதற்காக நிதிவேண்டும் மற்றவர்கள் முன்னாலேயே நிதி திரட்டி வைத்திருக்கிறார்கள் நாமும் நிதி திரட்டிவிட்டால் நாமும் போராட்டம் ஆரம்பித்து விடலாம். கேள்வி ஒன்று வந்திருக்கிறது. மந்திரிசபை கதர் திட்டத்தைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று. நான் என்ன நினைக்கிறேன் ஆர்வமுள்ள மக்கள் அவர்களுடைய சக்தியை ஒடுக்கி பயனற்ற வேலை செய்யத்தூண்டுவது தான் இந்தக்கதர் திட்டம். கதர் திட்டம் மகாத்மா காந்தி கொண்டிருந்த தீர்மானத்தைப்பற்றி காரியக் கமிட்டியிலேயே நம்பிக்கை இல்லை சிலர் கட்டுப் பாட்டுக்காகவே கதர் கட்டிவந்தார்கள். இதைப்பற்றி சத்தியமூர்த்தி, லாலா லஜபதி ராய் போன்ற தலைவர்களே எதிர்த்து இருக்கிறார்கள். காந்தியார் அவர்கள் திராவிட நாட்டின் எல்லையை மிதித்தவுடன் தான் நூல் நூற்கும் தக்ளியைப்பற்றிக் கூறுகிறார் டாடா மில்லைப்பற்றி ஒன்றும் கூறுவதில்லை. நானும் ஓர் காலத்தில் ராட்டினத்தை வைத்துக்கொண்டு ஊர் சுற்றியவன்தான். கதர் மூட்டையும் விற்று இருக்கிறேன் ஆனால் பலன் இல்லை. திட்டத்தினால் நம்முடைய பணம் வீணாக செலவழிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் நெய்து அவர்களே கட்டிக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். மாதம்

முழுதும் நூல் நூற்றால் கோமணம் செய்வதற்கு துணி கிடைக்குமா நம்ம நாடிமுத்து பிள்ளைக்கு நூல் நூற்கத்தெரியுமா நம்ம மைனர் ராட்டினம் சுற்றப் போகிறாரா அதெல்லாம் இல்லை. இந்த ஏலக்ஷனில் வேலை செய்த தோழர்கள் பலருக்கு வேலைதேடிக் கொடுப்பதற்காக செய்ததிட்டம் இது. இதிலயாவது நம்மவங்களுக்கு உத்தியோகம் கிடைக்குமா என்பது சந்தேகம், கிடைச்சால் அதுவரைக்கும் அவங்களுக்கு உழைப்பதற்கு பலன் கிடைக்கட்டும். நிர்ப்பந்தம் செய்து கதர் கட்டச் சொல்லுகிறார்கள். பரிகாசத்திற்குப் பயந்துகொண்டு கதர் கட்டுகிறார்கள். glascore மல் கட்டியவர்களை கதர் கட்டச்சொன்னால் தொல்லைதான். இயந்திரம் இல்லாமல் இந்த நாட்டின் பஞ்சத்தைத் தீர்க்க முடியாது. இது அறிஞர்கள் கண்ட உண்மை.

அடுத்தபடியாக இன்னும் சில உண்மைகளைப் பற்றி கூறுகிறேன். இதோ இருப்பது ஒரு ஜட்ஜினுடைய தீர்ப்பு இதற்கு வாதி:—பஞ்சாபிகேச ஐயர். பிரதி வாதி:-மாணிக்கம் மேஸ்திரி. கேஸ் என்ன தெரியுமா? மாணிக்கம் மேஸ்திரியும் இன்னும் சில குடியானவர்களும் பிணத்தை அக்கிரகாரம்வழியாக தூக்கிச்சென்று விட்டார்களாம் அதனாலே பிராமணர்களுக்கு மனது புண்பட்டு விட்டதாம். இதற்கு தண்டனை விதித்திருக்கிறார் ஜட்ஜ். ஜட்ஜ் தீர்ப்பிலே எழுதியிருக்கிறார், 'இந்த மாணிக்கம் என்பவர் மாத்திரம் அல்ல ஓர் கூட்டத்தார்கள் இப்பொழுது இது மாதிரி செய்யும்

படி தூண்டி வருகிறுர்கள். அந்தக் கூட்டத்தை அரசாங்கம் கண்டிக்காமல் அவர்கள் ஸ்தாபனத்தை சட்ட விரோதமானதாக ஆக்காமல் இருப்பது அதிசயமாக இருக்கிறது, என்று எழுதியிருக்கிறுர்.

மந்திரி வருகிற இடத்திற்கெல்லாம் கருப்புக் கொடி பிடிக்கவேண்டும் என்பதுதான் இதற்குப் பரிகாரம் என்கிற திட்டம் கையில் வைத்துக்கொண்டிருக்கிறேம். அன்றைக்கு சேலத்தில் நெடுஞ்செழியன் மீது அந்த அடி படவேண்டியது ஆனல் அவர் சற்று முன்னல் போய்விட்டார். என்னை சிலர் பதிலுக்கு பதில் செய்ய வில்லை என்று கோபிக்கிறுர்கள். நான் உத்தரவு கொடுக்கவில்லை. நான் உத்தரவு கொடுத்து இருந்தால் என்ன நடந்திருக்கும் நம்ம திராவிடர்களுக்குள்ளே அடித்துக் கொண்டிருப்பார்களே தவிர அதற்குக் காரணமானவர்களை அடிக்கப் போவதில்லை. நான் சொல்லுவது என்னவெனில் கல் வந்து நம்மேல் விழுந்தால் கல்லையா அடிப்பது நம்மேல் கல்லை விட்டெறிய ஏவினவனைத்தான் அடிக்கவேண்டும். நாய் நம்மைக் கடித்தால் நாம் நாயைக்கடிக்கக்கூடாது. அதை உகப்படுத்துவனுக்கு புத்தி கற்பிக்க வேண்டும் ஆகவே இதற்கு மந்திரிகள் காரணம். ஆகவே சிந்தனை செய்யுங்கள் தொழிலாளிகள் பணத்திற்காக வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்கும் பொழுது அவர்களைவிட அதிக பணம் வாங்கும் ஆசிரியர்களும் பணத்தைக் கொடுக்கிறுர்கள். காரணம் ஆசிரியப்பதவியில் ஆரியர்கள் அதிகம்

இருக்கிறார்கள் போலீஸ்காரர்களும் மிகக் குறைந்த சம்பளத்தோடு வேலை செய்கிறார்கள். அதிக தொல்லையும் படுகிறார்கள் அவர்களுக்கு ஆசிரியர் சம்பளம் கூட இல்லை. மந்திரிகள் மாத்திரம் 1500 ரூ. சம்பளம் வாங்குகிறார்கள். அவர்கள் வீட்டில் ஏதாவது நோய் என்றால் கார்மேல் கார் பறக்கிறது. ஆனால் போலீஸ்காரர் வீட்டில் காய்ச்சல் என்றால் யாரையாவது நூசென்ஸ் செய்கிறவனை தேடிக்கொண்டு போகவேண்டியதுதானா முறை? ஆகவேதான் நாங்கள் அவர்கள் ஓர்சமூகத்திற்கே உழைக்கிறார்கள் என்று கூறுகிறேன்.

தோழர்களே வீட்டிற்குச்சென்று அமைதியாக சிந்தித்துப்பாருங்கள். திராவிட கழகத்தில் சேருங்கள் திராவிட கழகம் திராவிடர்களுக்காகவே உழைக்கும் நான் அடுத்ததடவை இங்கு வரும்பொழுது 1000 தொண்டர்கள் இருக்கவேண்டும். கருப்புச் சட்டை வேண்டியவர்கள் 2ரூ. அனுப்புங்கள் சட்டை தச்சு அனுப்புகிறேன். தோழர்களே என் பேச்சை இவ்வளவு நேரம் அமைதியாக இருந்து கேட்டதற்கு என் நன்றி. திராவிட இளைஞர் கழகத்தாற்கு என் நன்றி ஆகவே நீங்கள் உங்கள் கழகத்தில் சேரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

67929


திராவிடநாடு! திராவிடருக்கே!!

கருணாநிதி (பவர்) பிரஸ், விஜயபுரம்.
for A. P. H. TE 125 Cs. 500.

R34 wM79 N47

ஸ்தாபிதம்: 1930.

**P. R. M. சீல் உத்திரவாதமுள்ளது.**



**அழகிய ஆபரணங்கள்!**

**வெள்ளிச் சாமான்கள்!!**

**பரிசளிக்கப் பாத்திரங்கள்!!!**

**பட்டைக் கொலுசுகள்**

உங்களுக்குத் தேவையான

வெள்ளிப் பாத்திரங்களுக்கும்,

பவுன் நகைகளுக்கும்

**நம்பிக்கை வாய்ந்த இடம்**

# P.R. முருகையசெட்டியார்,

பவுன்நகை & வெள்ளிப்பாத்திர வியாபாரம்.

**விஜயபுரம்.**